REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 ஜனவரி 2 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

வரு. 89 இல. 02 | January 02,Saturday, 2021 | 16பக்கங்கள் | 30/-






2021 வருடப் பிறப்பை முன்னிட்டு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று கதிர்காமம் புனித த... ஈடுபட்டார்.

## நுண்கடன் பொறிக்குள் சிக்கியுள்ள கிராமிய மக்களை மீட்கும் விசேட வேலைத்திட்டம்

### நாடு முழுவதும் இன்று ஆரம்பம், அனுராதபுரத்தில் முதல் நிகழ்வு



**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

நுண்கடன்கள் காரணமாக கடன் பொறிகளுக்கு சிக்கியுள்ள கிராமிய மக்களை மீட்டெடுப்பதற்கு நாடு முழுவதும் விசேட வேலைத் திட்டமொன்றை இன்று சனிக்கிழமை முதல் முன்னெடுக்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் இந்த வேலைத்திட்டம் வழிநடத்தப்படவுள்ளதாகவும் இதன் ஆரம்ப நிகழ்வு இன்று அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளதாகவும் அவர் கூறினார். 2021ஆம் ஆண்டில் கடமைகள் ஆரம்பிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே

06

### அ.இ.த.கா உறுப்பினர் இருவர் மீது பாரிய குற்றச்சாட்டு

## வேலைவாய்ப்பு, மணல் கொள்ளை தொடர்பாக முறையிட்டால் சட்ட நடவடிக்கைக்கு தயார்

**யாழ்.விசேட நிருபர்**

அகில இலங்கை தமிழ் காங்







பாதிக்கப்பட்டவர்கள் சட்ட நடவடிக்கை எடுக்க முன் வந்தால், சட்டத்தரணி எனும் முறையில் சட்ட நடவடிக்கைக்கு உதவ தயாரென யாழ். மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

06

### கொரோனா காரணமாக நாட்டிற்கு...

## இந்தியாவில் ... 283 பேர் நாடு திரும்பினர்

### அமைச்சர் டக்ளஸின் முயற்சியினால் முதலாவது தொகுதி வருகை

கொரோனா காரணமாக இந்தியாவில் சிக்கியிருந்த இலங்கையரை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சி காரணமாக ஒரு தொகுதி பயணிகள் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு அவதிப்பட்டு வந்த நிலையில் தம்மை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு நாடு திரும்பிய மக்கள் தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

முதற்கட்டமாக, ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமான நிறுவனத்திற்கு சொந்தமான யு.எல்1124 விமானம் மூலம் சுமார் 283 பயணிகள் வியாழக்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த நிலையிலேயே அமைச்சருக்கு தமது நன்றிகளை தெரிவித்துள்ளனர்.

பல்வேறு தேவைகளின் நிமித்தம் குறுகிய கால பயண ஏற்பாடுகளுடன் இந்தியாவிற்கு சென்ற சுமார் 1500 இற்கும் மேற்பட்ட இலங்கை பிரஜைகள் கொரோனா பரவலினால் ஏற்பட்ட போக்குவரத்து தடங்கல் காரணமாக நாட்டிற்கு

06





## ஆயிரம் ரூபாவினை வழங்க இதுவரை இணக்கம் தெரிவிக்காத கம்பனிகள்

### எனினும் பெற்றுக் கொடுப்பதில் அரசு தீவிரம்



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு முதலாளிமார் சம்மேளனம் இன்னும் இணக்கம் தெரிவிக்கவில்லையென பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

எனினும், சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சியில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தீவிரமாக ஈடுபட்டுவருகின்றார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள

06

### அடிப்படைவாதம், தீவிரவாதத்திற்கு இனி இடமில்லை

## இலங்கை இராணுவம் மனித உயிர்களை காத்த படையணி

### போர்க் குற்றச்சாட்டுகளுக்கு அஞ்சோம்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



இலங்கை இராணுவம் மனித உயிர்களை பாதுகாக்க போரிட்ட இராணுவம் என்பதால் மனிதவுரிமைச் செயற்பாடுகள் மற்றும் போர்க் குற்றச்சாட்டுகளுக்கு அஞ்சப்போவதில்லையென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரட்ண தெரிவித்தார்.

06

## இவ்வருட முதல் மூன்று மாதத்திற்குள் 20 வீதமான மக்களுக்கு தடுப்பூசி



### நம்பிக்கை வெளியிடுகிறார் டாக்டர் சுதத் சமரவீர

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

2021ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நாட்டின் சனத்தொகையில் 20 சதவீதமானவர்களுக்கு கொவிட் தடுப்பூசி கிடைக்கப்பெறுமென தொற்று நோய் தடுப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார். கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உலகில் ஒவ்வொரு மில்லியனுக்கு 522 கொரோனா

06

### சடலங்களை அடக்கம் செய்வதால்

## கொரோனா பரவும் என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் இல்லை

### மருத்துவ நிபுணர் கல்லூரி சங்கம்

சுகாதார அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள கடும் சுகாதார வழிமுறைகளின் கீழ் இலங்கையின் சகல பிரஜைகளினதும் குடும்ப அபிலாஷைகளின் பிரகாரம் எரிப்பதற்கோ அல்லது

06



College of Community Physicians of Sri Lanka

College of Community Physicians of Sri Lanka

CCPSL Position Paper on the debate about compulsory cremation of victims of COVID-19



(கினிகத்தேனை தினகரன் நிருபர்)

அமரர் சந்திரசேகரனின் 11வது நினைவு தின நிகழ்வு தலவாக்கலை தலைமை காரியாலயத்தில் நடைபெற்றது. தொழிலாளர் முன்னணியின் பொதுச் செயலாளர் அனுஷா சந்திரசேகரன், அமரர் சந்திரசேகரனின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவதைக் காணலாம்.

## மேலதிக சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல

## கிளிநொச்சியில் இலஞ்சம் வாங்கிய அதிகாரி கைது

## புத்தளம் பகுதியில் திடீரென உட்புகுந்த கடல் நீர்

## மாகாண சபை முறையை நானும் எதிர்க்கிறேன்